# அருள் ஒளி



## மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் மகாகும்பாபிஷேக சிறப்பு மலர்

இதழ்: 167

சித்திரை~ 2025

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை இலங்கை.

உ
அம்பாள் துணை

# அருள் ஒளி

மாதாந்த சஞ்சிகை (சித்திரை ~ 2025)

ஆசிரியர்
கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்கள்

உதவி ஆசிரியர்
திரு. ச. சந்தோசன் அவர்கள்

வெளியீடு: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை இலங்கை.

T.P: 021 321 3151, 021 224 1909
Email: thurkaiammantemple@mail.com
facebook: @tellidurga

பதிவு இல: ISSN 2362 - 0587
ISSN 978 - 955-23 - 0019 -3

## ஆசிரியர் உரை



## கோமாதா என்று பசுக்களை வழிபட்ட சமுகம் இன்று உணவுக்காக பசுக்களை கொலை செய்வது மகா பாவம்

வடக்கு கிழக்கு மாகாணங்களில் என்றுமில்லாதவாறு இறைச்சிக்காக பசுக்களை பயன்படுத்துவது அதிகரித்துக் கொண்டு வருகிறது.

மிகப் பாரம்பரியமான வடக்கில் இப்பொழுது மாமிச உணவு கடைகளின் தொகை மிகவும் அதிகரிக்கிறது. தென் இலங்கையில் இருந்து புதிய புதிய சுப்ப மார்க்கெட் என்ற நவீன சந்தை கட்டடத் தொகுதிகள் மிக வேகமாக வடக்கு கிழக்கை ஆட்கொண்டது போல தற்போது இறைச்சி வகைகளை விற்கின்ற கடைகள் மற்றும் நவீன உணவு வகைகள், மாமிச உணவு வகைகளை விற்கின்ற கடைகள் அதிகரித்துக் கொண்டு செல்கின்றது. தலைசிறந்த

மருத்துவர் நிபுணர்கள் தற்போது இலங்கையில் என்றுமில்லாதவாறு கொழுப்பினால் பலர் நோயாளிகள் ஆவதை சுட்டிக்காட்டுகின்றார்கள். மாரடைப்பு மற்றும் இதர நோய்கள் உணவுப் பழக்க வழக்கங்களில் ஏற்பட்ட மாற்றங்களினால் உருவாகின்றது என்று பொதுவாக வைத்தியர்கள் எச்சரிக்கை செய்கிறார்கள்.

இதே வேளையில் வடக்கு கிழக்கில் உணவகங்கள் விதவிதமான மிருக உணவுகளை விற்கத் தொடங்கி இருக்கின்றார்கள். இத்தாலி நாட்டு உணவு வகை,ஜேர்மன் நாட்டு உணவு வகை மற்றும் அமெரிக்க நாட்டு உணவு வகை என்று புதிய ஸ்தாபனங்கள் வடக்கில் யுத்தத்துக்குப் பின்பு தாராளமாக திறக்கப்பட்டுள்ளது. இந்த உணவு நிலையங்களை நடத்துபவர்களுக்கு பசுக்கள் ,ஆடுகள் மிகவும் தேவைப்படுகிறது. காரணம் மாமிச உணவை பிரதானமாக இந்த வணிக ஸ்தாபனங்கள் விற்பனை செய்வதனால் அதிகம் தேவைப்படுகிறது. எனவே மாமிச உணவை கொள்வனவு செய்வதற்கு பசுக்களை குறிப்பாக இளம் பசுக்கள் மற்றும் ஆடுகள் கோழிகள் என்பவற்றை தினமும் ஏராளமாக கொலை செய்யும் சூழல் அதிகரித்து இருக்கிறது.



இது உடல் நலத்திற்கு கெடுதி மட்டுமல்ல உள நலத்துக்கும் கெடுதி உங்கள் கிராமங்களிலே பால் உற்பத்தியை அதிகரிக்காமல் பசுக்களை இடையிலேயே கொல்லுவதனால் வருகின்ற ஆபத்து மிகப்பாரதூரமானது. இது பற்றி பல பத்திரிகைகள் ஆசிரியர் தலையங்கங்கள் தீட்டிய போதிலும் வடக்கு கிழக்கில் இந்த கட்டுப்பாடு இன்னும் சீராக அமையவில்லை. மன்னார் பகுதியில் மேயவிட்ட மாடுகளை களவாக பிடித்துக்கொண்டு வந்து யாழ்ப்பாணம் வரை கொண்டு வந்து சேர்த்து இறைச்சிக்கு பயன்படுத்துகிறார்கள்.

இடப்பெயர்வுக்கு முன்பு யாழ்குடா நாட்டில் தீவகத்தில் ஏராளமான பசுக்கள் இருந்தது. அந்தப் பசுக்கள் கட்டாக்காலியாக ஓடித் திரிந்தது.

இப்பொழுது தீவகங்களிலேயே பசுக்களின் தொகை என்றும் இல்லாதவாறு மிகவும் குறைந்து விட்டது. அதற்குக் காரணம் என்னவென்றால் களவாக அந்தப் பசுக்களை பிடித்துக் கொண்டு வந்து மாமிச உணவு விற்பனை நிலையங்களுக்கு அதனை விற்கின்ற திருடர்கள் அதிகரித்ததன் விளைவாக இன்று தீவகத்தில் பசுக்கள் என்றும் இல்லாதவாறு குறைந்துவிட்டன.



ஒரு காலத்தில் ஆவுறிஞ்சிக் கல்லும் வீதிகளிலே பசுக்கள் தண்ணீர் குடிப்பதற்கு கேணிகள் குளங்களும் வெட்டிக்காத்த எமது சமூகம் இன்று பசுக்களை வெட்டுவதற்கு உடந்தையாக இருப்பது பரிதாபமானது. கோமாதா என்றும் மகாலட்சுமி என்றும் பசுக்களை கண்கண்ட தெய்வமாக கருதிய பண்பாடு இனிமேல் என்னவாகும் என்பது கேள்விக்குறி? இந்த நிலையை மாற்றி அமைக்க வேண்டும்.

சுகாதாரத்துக்கு கேடான விடயங்களை கற்ற சமூகம் வெளிப்படுத்தி, இந்த அளவுக்கு அதிகமான மாமிசம் உண்ணுகின்ற பண்பாட்டிலிருந்து எதிர்கால சந்ததியை காப்பாற்ற வேண்டும். அதே நேரத்தில் எங்கள் இயற்கை வளத்தோடு கூடிய எங்கள் மண்ணிலே வாழக்கூடிய எங்கள் மண்ணுக்கு பொருத்தமான உயிரினங்களாக இருந்த பாரம்பரிய பசுக்கள், பாரம்பரிய ஆடுகள் இல்லாமல் போய் இப்பொழுது கலவன் இன பசுக்களும், கலவன் இன ஆடுகளும் இறக்குமதி செய்கின்ற பரிதாப நிலைத்தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இந்த நிலை தொடர்பாக கற்ற சமூகம் மற்றும் ஆத்மீகம் சார்ந்தவர்களும் இணைந்து சரியான வழியிலே நடவடிக்கை எடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயம் ஆகும்.

**கலாநிதி. ஆறு. திருமுருகன்**
**ஆசிரியர் ~ அருள்ஒளி**

# பங்குனி உத்திர நன்நாளில் மாவைக் கந்தவேள் பெருமானின் மஹா கும்பாபிஷேக பெருவிழா

மாவைக் கந்தவேள் பெருமான் ஆலயம் தனிப்பட்ட வழிபாட்டு நிலையமாக மட்டுமல்லாமல், மக்களின் வாழ்க்கை, பண்பாடு மற்றும் ஆன்மிகத்துடன் நெருக்கமான தொடர்பு கொண்டுள்ளது. யுத்தங்களால் ஏற்பட்ட அழிவுகளையும் தாண்டி, ஆலயம் மீண்டும் கம்பீரமாக விளங்குவதோடு, ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு மஹா கும்பாபிஷேக விழா நடைபெறுவதற்கான சிறப்பான வாய்ப்பு உருவாகியுள்ளது. புண்ணிய நாளான பங்குனி உத்திரமாகிய ஏப்ரல் 11, 2025 அன்று இந்த மாபெரும் புனித நிகழ்வு நடைபெறவுள்ளது.

பல ஆயிரம் பக்தர்கள் திரண்டு வரவிருக்கும் இந்த நிகழ்வில், அவர்களின் நலன் கருதி பல ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அடியார்களுக்கு உணவு வழங்குவதற்காக ஆலயத்தை சுற்றி ஆறு இடங்களில் அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பக்தர்கள் அதிக அளவில் திரண்டிருப்பதால், ஆலய வெளி வீதிகளில் வியாபார நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. தரிக்கவதற்காக தெரிவு செய்யப்பட்ட இடங்களில் மட்டுமே வியாபார நிலையங்கள் அமைக்க அனுமதி வழங்கப்படும்.

ஆலயத்தை சுற்றி தேவையான இடங்களில் சுத்தமான குடிநீர் தொடர்ந்து வழங்கப்படும். அடியார்களின் மருத்துவ தேவைகளுக்கு பல மருத்துவ அதிகாரிகள் பணியில் ஈடுபடுவார்கள். அவசர தேவைக்காக அம்புலன்ஸ் வசதி செய்யப்பட்டுள்ளதோடு, போக்குவரத்து பொலிஸார் வாகனங்களை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். வாகனங்களை




தரிக்குவதற்காக பல இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. மஹா கும்பாபிஷேக தினத்திலிருந்து விசேட இரவு நேர போக்குவரத்து வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஏப்ரல் 6 முதல் 11 வரை பக்தர்களின்

பாதுகாப்பிற்காக ஆலயத்தில் தற்காலிக பொலிஸ் நிலையம் அமைக்கப்படும். சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக ஒற்றைப்படை பிளாஸ்டிக் பயன்பாடு முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளதோடு, தடை செய்யப்பட்ட பொருட்களை பயன்படுத்த வேண்டாம் என பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மஹா கும்பாபிஷேக நிகழ்வுகளை நேரடியாக பார்வையிட முடியாதவர்களுக்காக ஆலயத்தை சுற்றி பல இடங்களில் பெரிய திரைகள் மூலமாக நேரடி ஒளிபரப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அறநெறி பாடசாலை மாணவர்களின் கலைத்திறனுக்காக தினமும் மாலை ஏழு மணியிலிருந்து கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

மஹா கும்பாபிஷேக நிகழ்வுகள் ஏப்ரல் 4 ஆம் தேதி அதிகாலை 4:30 மணிக்கு கர்மாரம்பம் மூலம் ஆரம்பமாகும். இதனை தொடர்ந்து ஏப்ரல் 6 முதல் 11 வரை தினமும் காலை, மாலை என யாகசாலை பூஜைகள் நடைபெறவுள்ளன. ஏப்ரல் 7 முதல் 9 ஆம் தேதி வரை அதிகாலை 5:00 மணி முதல் இரவு 10:00 மணி வரை பக்தர்கள் எண்ணைக் காப்பு சாற்றலாம். மேலும், ஏப்ரல் 10 ஆம் தேதி அதிகாலை 5:00 மணி முதல் மதியம் 12:00 மணி வரை எண்ணைக் காப்பு நிகழ்வு நடைபெறும்.

மஹா கும்பாபிஷேகத்தின் முக்கிய நிகழ்வான 10ம் கால யாக பூஜை ஏப்ரல் 11 ஆம் தேதி அதிகாலை 3:30 மணிக்கு நடைபெற உள்ளது. அதன் பின்னர், காலை 8:07 மணி முதல் 10:09 மணி வரை கோபுரங்கள், விமானங்கள், விநாயகர், மூலவர் முதல் பரிவார மூர்த்திகளுக்கு மஹா கும்பாபிஷேக அபிஷேகங்கள் நடத்தப்படும். இதற்குப் பிறகு மாலை திருக்கல்யாண வைபவம் சிறப்பாக நடைபெறும். மஹா கும்பாபிஷேகத்தை தொடர்ந்து, ஏப்ரல் 12 ஆம் தேதி முதல் 48 நாட்கள் மண்டலாபிகேம் நடைபெற உள்ளது.






இந்தியாவின் புகழ்பெற்ற சிரவை ஆதீன தவத்திரு குமரகுருபர சுவாமிகள், மாவைக் கந்தவேள் பெருமானின் மஹா கும்பாபிஷேக பெருவிழாவில் கலந்து கொள்ள எதிர்வரும் ஏப்ரல் 6, 2025 அன்று யாழ்ப்பாணம் வருகை தரவிருக்கின்றார். பழனி ஆதீனத்தை சார்ந்த தவத்திரு சாது சண்முக அடிகளார், மயிலம் பொம்மபுர ஆதீன தவத்திரு ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள், பேரூர் ஆதீனத்தை சார்ந்த தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார், ஸ்ரீ கூனம்பட்டி கல்யாணபுரி ஆதீனத்தை சார்ந்த தவத்திரு ஸ்ரீமத் ராஜ சரண மாணிக்கவாசக் குரு சுவாமிகள், செஞ்கோல் ஆதீனத்தை சார்ந்த தவத்திரு ஸ்ரீ சிவப்பிரகாச தேசிக சத்திய ஞான பரமாச்சாரிய சுவாமிகள் ஆகியோரும் விழாவில் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

சமயம் என்பது கடவுள் வழிபாடு மற்றும் சமயக் கல்வி எனும் இரண்டு முக்கியமான அம்சங்களை கொண்டுள்ளது. திருக்கோயில்கள் தெய்வ வழிபாட்டிற்கும், திருமடங்கள் சமயக் கல்வி மற்றும் ஆன்மிக ஆராய்ச்சிக்கும் முக்கிய இடமாக விளங்குகின்றன. ஆதீனங்கள் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பெரும் பங்காற்றியதனை உணர தமிழ் இலக்கிய வரலாற்று ஆசிரியர் திரு. சி. வை. தாமோதரனார் ஆதீன காலம் எனக் குறிப்பிட்டிருந்தார். ,ந்த வரலாற்று பின்னணியைக் கொண்டுள்ள சைவ ஆதீன குருமார்கள் கலந்து கொள்ளும் இவ்விழா, மாவைக் கந்தவேள் பெருமானின் மஹா கும்பாபிஷேகத்தை மேலும் சிறப்பிக்கும்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்நிகழ்வில் பங்கேற்க அனைவரும் வருகை தாருங்கள். மாவைக் கந்தவேள் பெருமானின் அருள் அனைவருக்கும் கிடைக்க வழிவகையாக்குவோம்.


மாவிட்டபுரம் ஸ்ரீகந்தசுவாமி கோவில்
ஸ்ரீ மஹாவல்லி ஸ்ரீ கஜவல்லி சமேத ஸ்ரீ சுப்ரமண்ய அனுக்கிரகத்தினால் ஸம்புரோக்ஷண சித்விலாஸ
மஹா கும்பாபிஷேகப் பெருவிழா
விஞ்ஞாபன பத்திரிகை - 11.04.2025 வெள்ளிக்கிழமை
கிரியாகால நிகழ்வுகள்
:- அதிகாலை 4.32 மணிமுதல் கர்மாரம்பம், கணபதிஹோமம், பூர்வாங்க கிரியைகள் ஹோமாதிகள் சாந்திகள் நடைபெற்று இரவு 9.30 மணி வரை தொடர்ந்து கிரியைகள் நடைபெற்று கோபூஜை திருமறை, திருமுறை பாராயணம் திருவருட் பிரசாதம்
:- காலை 6.30 மணி முதல் இரவு 9.30 மணி வரை நவக்கிரக ஹோமம் பூர்வாங்க கிரியைகள் - ஹோமாதிகள் சாந்திகள் நடைபெற்று கோபூஜை திருமறை திருமுறை பாராயணம் திருவருட் பிரசாதம்.
:- காலை மணி 6.30 முதல் இரவு 7.00 மணி வரை பூர்வாங்க கிரியைகள் ஹோமாதிகள் சாந்திகள் நடைபெற்று கோபூஜை திருமறை திருமுறை பாராயணம் திருவருட் பிரசாதம்.
:- இரவு 8.10 மணி முதல் கடஸ்தாபனம் கலாகர்ஷணம் யாகசாலைப் பிரவேசம் 1ம் கால யாகசாலை பூசை தீபயந்திரம் பிம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம் தீபாராதனை திருமறை திருமுறை பாராயணம் திருவருட் பிரசாதம்.
:- காலை 7.00 மணிமுதல் மதியம் 12.30 மணிவரை யாகபூஜை 2ம் காலம் ஹோமங்கள் நிகழ்ச்சிகள் கோபூஜை திருமறை திருமுறை பாராயணம் திருவருட்பிரசாதம். மாலை 4.00 மணி முதல் இரவு 8.30 மணி வரை யாக பூஜை 3ம் காலம் ஹோமங்கள் நிகழ்ச்சிகள் திருமறை திருமுறைபாராயணம் திருவருட் பிரசாதம்.
:- காலை 7.00 மணி முதல் மதியம் 12.30 மணி வரை யாக பூசை 4ம் காலம் ஹோமங்கள் நிகழ்ச்சிகள் கோபூஜை திருமறை, திருமுறை பாராயணம் திருவருட்பிரசாதம் மாலை 4.00 மணி முதல் இரவு 8.30 மணி வரை யாக பூசை 5ம் காலம் ஹோமங்கள், நிகழ்ச்சிகள் திருமறை திருமுறை பாராயணம் திருவருட்பிரசாதம்
:- காலை 7.00 மணி முதல் 12.30 மணி மதியம் வரையாக பூசை 6ம் காலம் ஹோமங்கள் நிகழ்ச்சிகள் கோபூஜை திருமறை திருமுறைபாராயணம் திருவருட்பிரசாதம். மாலை 4.00 மணி முதல் இரவு 8.30 மணி வரை யாகபூசை 7ம் காலம் ஹோமங்கள், நிகழ்ச்சிகள் திருமறை திருமுறை பாராயணம். திருவருட் பிரசாதம்.
:- காலை 7.00 மணி முதல் 12.30 மணி மதியம் வரை யாக பூசை 8ம் காலம் ஹோமங்கள் நிகழ்ச்சிகள் கோபூஜை திருமறை திருமுறை பாராயணம் திருவருட்பிரசாதம் மாலை 4.00 மணி முதல் யாக பூசை 9ம் காலம் நியாசாதிகள் விசேஷ திரவிய ஹோமம், ஸ்பர்சாகுதி, பூர்ணாகுதி நிகழ்ச்சிகள் திருமறை திருமுறை பாராயணம் திருவருட் பிரசாதம்.
:- அதிகாலை 3.30 மணிமுதல் 10ம்காலம் யாகபூசை மஹாபூர்ணாகுதி நிகழ்ச்சிகள் திருமறை திருமுறைபாராயணம் மஹாதீபாராதனை காலை 7.00 மணி கும்பங்கள் யாகசாலைக்கு புறப்பாடு காலை 8.07 மணி முதல் மேற்கு இராஜகோபுரம் மணிக்கோபுரங்கள் மூலவர்ஸ்தூபி பரிவார மூர்த்திகள் ஸ்தூபி கும்பாபிஷேகம் தொடர்ந்து காலை 9.36 மணிமுதல் விநாயக பெருமான் மூலவர் வள்ளி தேவசேனா சமேத கந்தசுவாமிப் பெருமான் இதர பரிவார மூர்த்திகள் சித்விலாஸ மஹாகும்பாபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து தசதரிசனம் மஹாபிஷேகம் விஷேட பூசை. கோபூசை நிகழ்ச்சிகள் திருமறை திருமுறை பாராயணம் திருவருட்பிரசாதம். பகல் 11.30 மணி முதல் பிரமுகர்கள் கௌரவிப்பு சிவாச்சாரியார்கள் கௌரவிப்பு கும்பாபிஷேக திருமலர் வெளியீடு பக்த கோடிகளுக்கும் சகல ஜீவராசிகளுக்கும் ஆசீர்வாதம் வழங்கும் நிகழ்வு நடைபெறும்.
கர்மாரம்பம்
எண்ணெய்க்காப்பு
யாகாரம்பம்
தொடர்ந்து 48நாட்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறும். இக்காலத்தில் அடியவர்கள் ஆசாரசீலர்களாக வருகைதந்து தங்களால் இயன்ற பால், தயிர், நெய், இளநீர், பூக்கள், பூமாலைகள், தானியங்கள் போன்றவற்றை தந்துதவி பேரானந்தப் பெருவாழ்வு பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.
தினமும் அன்னபூரணி உமாமகேஸ்வர பூஜையுடன் அன்னதானம் நடைபெறும்.
0094(0)212243334
0094(0)778302573
0094(0)771042257
www.mavaikandan.com
mavaikandan@yahoo.com
MAVIDDAPURAM KANDASWAMY TEMPLE @MAVAIKANDAN
Thurkka @ Mallakam 0750109501

# மகிமைகள் நிறைந்த மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்



இலங்கை நாட்டின் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அமைந்துள்ளது, மாவிட்டபுரம் கந்தசாமி திருக்கோவில். “மாவிட்டபுரம்“ என்பதற்கு இரண்டு காரணங்கள் கூறப்படுகின்றன. மா +புரம் என பிரித்து பொருள் கொண்டால் மாமர வடிவிலான அசுரனை சம்காரம் செய்து அருளியத் தலம் என்பது பொருள். மாருதப்புர வீகவல்லியின் மா-குதிரை/ பெருநோய், விட்ட- நீங்கிய, புரம் - தலம் என்பதால் மாவிட்டபுரம் என்று ஆனதாக மற்றொரு காரணமும் கூறப்படுகிறது.

## தல வரலாறு

சோழ மன்னனின் மகளாக பிறந்தவள், மாருதப்புரவீகவல்லி. இவளது முற்பிறவியில் ஹயக்கிரீவ முனிவரின் சாபத்தால் குன்ம நோயும், குதிரை முகமும் தோன்றி இளவரசியை வாட்டியது. இந்த குறை தீர சோழ, பாண்டிய, சேர நாட்டு திருத்தலங்கள் பலவற்றிலும் நீராடி இறைவனை வழிபட்டு வந்தாள். தல யாத்திரையின் போது, சாந்தலிங்க முனிவரை தரிசனம் செய்தாள். அந்த முனிவர், ”இலங்கை நாட்டில் அமைந்துள்ள நகுலேச்சரம் எனும் தலத் தீர்த்தமான கண்டகி தீர்த்தத்தில் நீராடினால் சாபம் நீங்கும்” என்றார்.



பிரம்மஸ்ரீ சா. சுப்பிரமணியக்குருக்கள்

[இரத்தினக் குருக்கள்]

[தற்போதய ஆதீன கர்த்தாவின் பூட்டனார்]

இதையடுத்து கதிர்காமம் தீர்த்த யாத்திரை முடித்த நிலையில், நகுலேச்சரத்தில் நகுல முனிவரை சந்தித்தாள். அவர், ”எனக்கு ஏற்பட்ட கீரி முகம், இத்தலம் நீராடிய பிறகு இயல்பான முகமாக மாறியது. அதேபோல் நளன், அர்ச்சுனன் ஆகியோரும் இங்கு நீராடி நலம் பெற்றுள்ளனர். எனவே நீயும் இத்தீர்த்தத்தில் நீராடி உன் சாபம் நீங்கப்பெறுவாய்” என்றார். அதன்படியே நீராடி கந்தனை வணங்கி வழிபட்டு வந்த

மாருதப்புரவீகவல்லிக்கு, அவளது நோய் நீங்கியதுடன், குதிரை முகமும் அகன்று அழகிய முகம் கிடைத்தது. அது முதல் இந்த தலம் "துரகானன விமோசனபுரி" என வடமொழியிலும், "மாவிட்டபுரம்" எனத் தமிழிலும் அழைக்கப்பட்டது.



பிரம்மஸ்ரீ சு. துரைசாமிக் குருக்கள் அவர்கள்
(தற்போதய ஆதீன கர்த்தாவின் பாட்டனார்)

தன் மகளின் நோய் தீர்த்த இறைவனுக்கு, சோழ மன்னன் மிகப்பெரிய ஆலயம் ஒன்றை எழுப்பினான். இவ்வாலயத்தில் அருளும் கந்தசாமி விக்ரகம் இங்கிருந்து இலங்கைக்கு அனுப்பப்பட்டது. அது சென்றடைந்த இலங்கை துறைமுகம் இன்று "காங்கேசன் துறை முகம்" என்று அழைக்கப்படுகிறது. நகுநலேச்சரம் தலத்தில் மாருதப்புரவீக வல்லியின் மீது காதல் கொண்ட உக்கிர சிங்கசேனன், இளவரசியின் தந்தையிடம் அவளை மணம் முடிக்க அனுமதி பெற்றான். அவர்களுக்கு கோவில் திருப்பணி முடிந்து குடமுழுக்கு நடைபெற்ற பின்னர் திருமணம் நடைபெற்றது.

## ஆலய அமைப்பு

நான்கு திசைகளிலும் வாசல்களை கொண்டிருந்தாலும், வடக்கு வாசலைத் தவிர மற்ற மூன்று வாசல்கள்தான் பயன்பாட்டில் உள்ளன. மேற்கு வாசலில் 80 அடி உயர ராஜகோபுரம் கலைநயத்துடன் விண்ணை முட்டி நிற்கிறது. அருகே வேட்டை மண்டபம் உள்ளது. நான்கு மாட வீதிகளும், மூன்று பிரகாரங்களுமாக ஆலயம் அமைந்துள்ளது. ஆலயத்தில் வில்லு மண்டபம், தட்டி மண்டபம், ராஜகோபுரம், வசந்த மண்டபம், துவார கோபுரம், ஸ்தம்ப மண்டபம், ஸ்நபன மண்டபம், மகா மண்டபம் , அந்தாரள மண்டபம், அர்த்த மண்டபம், கருவறை ஆகியவை முறைப்படி கட்டப்பட்டுள்ளன. இளவரசியின் குதிரையின் முகம் மற்றும் அழகு முகம் கொண்ட சிற்பங்கள் ஸ்நபன மண்டபத்தில் காணப்படுகின்றன. ஆலயத்தில் விநாயகர், சந்தான கோபாலர், மகாலட்சுமி, நாகராஜர், சண்முகர், முத்துக்குமாரசாமி, சுப்பிரமணியர், சந்திரசேகரர், மாயூரர் ஆகிய திருமேனிகள் ஒருங்கே அமைந்துள்ளன



பிரம்மஸ்ரீ சு. து. சண்முகநாதக் குருக்கள் அவர்கள்
(தற்போதய ஆதீன கர்த்தாவின் தந்தையார்)
(கீரிமலைக்கு தீர்த்தமாட சென்ற கந்தப்பெருமானுடன்)

இரண்டாம் பிரகாரத்தின் மேற்கே பழனி தண்டாயுதபாணி, வடக்கே திருச்செந்தூர் செந்தில் ஆண்டவன், கிழக்கே நவக்கிரகங்கள் மற்றும் பைரவர் சன்னிதிகள் இருக்கின்றன. இவற்றிற்கெல்லாம் நடுநாயகமாக கருவறையில் வள்ளி - தெய்வானை சமேத கந்தசுவாமி நின்ற கோலத்தில் அருள் வழங்குகிறார். இவர்களின் பின்புறம் காவலாக மயில் அழகுடன் காட்சி தருகிறது. இந்த வடிவம் சோழர் காலத்தைச் சேர்ந்தது என்பதை ஆய்வாளர்கள் உறுதி செய்துள்ளனர்.

மாருதப் புரவீகவல்லி வழிபட்ட செம்பு வேல், சிவலிங்கம், தான்தோன்றி விநாயகர் ஆகிய மூன்றுமே இன்றும் ஆலயங்களில் இருக்கின்றன. இந்த மூன்றிற்கும் முதல் மரியாதை செய்த பிறகே, பிற தெய்வங்களுக்கு பூஜைகள் நடைபெறும். ஆலயத்திற்கு சிறப்பு சேர்க்கும் வகையில், கிழக்கே 127 அடி உயரத்தில் 11 நிலைகள் கொண்ட இலங்கையின் மிக உயரமான ராஜகோபுரம் எழுப்பப்பட்டு வருகிறது. இவ்வாலயத்தைப் பற்றி அருணகிரிநாதர் புகழ்ந்து பாடியிருக்கிறார்.



பிரம்மஸ்ரீ சு. து. ச. இரத்தின சபாபதிக் குருக்கள் அவர்கள்
(தற்போதய ஆதீன கர்த்தா)

இது தவிர யாழ்ப்பாண வைணவ வைபவ மாலை, தட்சிணக் கயிலாய புராணம், கயிலாயம் மாலை, நகுலாசல புராணம், நகுல மலைக் குறிஞ்சி, நகுல மலைச் சதகம், நகுலகிரி புராணம், நகுலேஸ்வரர் வினோத வித்யா கவி

பூங்கொத்து முதலிய பழமையான நூல்கள் பலவும் இத்தலத்தை விரிவாக புகழ்ந்து உரைக்கின்றன. யாழ்ப்பாண நல்லூர் சரவணமுத்து புலவர் இயற்றிய ஊஞ்சல் பாக்கள், சுன்னாகம் முத்துக்குமார் கவிராசர் இயற்றிய மாவை சுப்பிரமணியர் தோத்திரம், மாவை கலிவெண்பா, புன்னை நகர் கணேச ஐயர் இயற்றிய மாலை சுப்பிரமணியன் தோத்திர விருத்தம் போன்ற ஏராளமான இலக்கியங்கள் மாவைக் கந்தனை புகழ்கின்றன.





இந்த ஆலயத்தில் அமாவாசை தோறும் கண்டகி தீர்த்தத்தில் தீர்த்தவாரி நடைபெறுவது சிறப்பு. தைப்பூசம் லட்சார்ச்சனை, ஆனி மற்றும் ஆடியில் 25 நாட்கள் மகோற்சவம் நடைபெறுகிறது. இவ்விழாவில் இலங்கையின் அனைத்து பகுதிகளில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்வார்கள். இது தவிர ஐப்பசி சுக்ர வாரம், நவராத்திரி , கந்த சஷ்டி, கார்த்திகை தீபம், கார்த்திகை சோமவாரம், மார்கழி திருவெம்பாவை என விழாக்கள் குறைவின்றி நடைபெறுகின்றன.




மாவை ஆதீனத்தால் சிறப்புடன் நிர்வகிக்கப்பட்டு வரும் இந்த ஆலயத்தில் 6 கால பூஜைகள் நடைபெறுகிறது. இவ்வாலயம் தினமும் காலை 6 மணி முதல் இரவு 7.30 மணி வரை பக்தர்கள் தரிசனம் செய்வதற்காக திறந்து வைக்கப்பட்டிருக்கும்.



# அதிகாலை பிறக்கும் விசுவாவசு வருட சிறப்பு வழிபாடுகள்




தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், விசுவாவசு வருடப்பிறப்பு பூசைகள் 2025 ஏப்ரல் 14ஆம் திகதி சிறப்பாக நடைபெற உள்ளது.

இப் பூசை வழிபாடுகள் அதிகாலை 1.00 மணிக்கு திருப்பள்ளி எழுச்சியுடன் ஆரம்பமாகும். பின்னர், 1.30 மணிக்கு உதயகால பூஜை மற்றும் 2.00 மணிக்கு சங்கல்பம் நடைபெறும். இதற்குப் பிறகு, 3.00 மணிக்கு 108 கலச சங்காபிஷேகம் நடைபெற்று, 3.21 மணிக்கு விசுவாவசு வருடப்பிறப்பு விஷேட பூஜை நடத்தப்படும்.

மேலும், அதிகாலை 4.00 மணிக்கு பஞ்சாங்க படிப்பு மற்றும் கைவிஷேடம் வழங்கல் நடைபெறும். 5.00 மணிக்கு காலச்சந்தி பூஜை, 5.30 மணிக்கு வசந்த மண்டப பூஜை மற்றும் 6.00 மணிக்கு சங்கிராந்தி தீர்த்தம் மற்றும் தீர்த்தமண்டபத்தில் எழுந்தருளல் போன்ற முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெறும் முற்பகல் 10.00 மணிக்கு ஸ்நபன அபிஷேகம் மற்றும் 11.00 மணிக்கு பூஜை நடைபெறும். பிற்பகல் 4.30 மணிக்கு சாயரட்சை பூஜை மற்றும் இரவு 7.00 மணிக்கு அர்த்தசாம பூஜை நடைபெறும்.

துர்க்காதேவி ஆலயத்தில் நடைபெறவுள்ள இந்த புத்தாண்டு சிறப்பு வழிபாடுகளில் பக்தர்கள் பங்கேற்று தெய்வீக அருள் பெறும்படி அழைக்கப்படுகின்றனர். பிறக்கும் புத்தாண்டு அனைவருக்கும் இன்பங்களையும் சகல சௌபாக்கியங்களையும் வழங்க வாழ்த்துவதோடு துர்க்கையம்மனை வேண்டுகிறோம்.

# தேசிய மட்டப் போட்டியில் தெல்லிப்பழை துர்க்கா தேவி அறநெறிப் பாடசாலை மாணவன் இரண்டாம் இடம்




தெல்லிப்பழை துர்க்கா தேவி அறநெறிப் பாடசாலை மாணவரான அ.சஜித், அண்மையில் நடைபெற்ற தேசிய மட்டப் போட்டியில் கதாப்பிரசங்கப் பிரிவில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டு, பாடசாலையின் பெருமையை உயர்த்தியுள்ளார். அவருடைய முயற்சிக்கும், பெற்றோர்களின் ஆதரவுக்கும், ஆசிரியர்களின் அர்ப்பணிப்புக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். எதிர்காலத்தில் மேலும் பல வெற்றிகள் அவரை தேடிப் பிடிக்க எங்கள் மனமார்ந்த வாழ்த்துக்கள்!

சமூகத்தில் அறநெறிப் பாடசாலைகளின் பங்களிப்பு முக்கியமானது. இங்கு குழந்தைகள் உளச்சமநிலை, மதிப்பீடு, சமூகப் பொறுப்பு ஆகியவை வளர்க்கப்பட்டு, எங்கள் பாரம்பரியத்தையும் ஆன்மீக அடிப்படைகளையும் வலுப்படுத்தும் வகையில் கல்வி அளிக்கப்படுகிறது. அ.சஜித் பெற்றுள்ள இந்த வெற்றி, இத்தகைய பாடசாலைகளின் வளர்ச்சிக்கும், மாணவர்களின் திறமை வெளிப்பாட்டிற்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அமைகிறது.

ஒரு மாணவன் கல்வியுடன் கூடிய ஒழுக்கத்தையும், அறநெறியையும் வளர்த்துக் கொண்டால், அது அவருக்கு மட்டுமல்ல, சமூகத்திற்கே பயனுள்ளதாக இருக்கும். இதனை உணர்த்தும் வகையில் தெல்லிப்பழை துர்க்கா தேவி அறநெறிப் பாடசாலை தொடர்ந்து மாணவர்களுக்கு நேர்மையான வாழ்வியல் பயிற்சிகளை வழங்கி வருகிறது.

"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும்
தன்மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்"
(குறள் 69)

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை நன்கு வளர்த்து, கல்வியிலும் ஒழுக்கத்திலும் உயர்த்தினால், அந்த மகிழ்ச்சி பிறவியில் சிறந்த ஒரு பெருமையாக அமையும். அதனால், ஒவ்வொரு பெற்றோரும் தங்களுடைய பிள்ளைகளை அறநெறிப் பாடசாலைகளில் சேர்த்து, ஒழுக்கம், பண்பாடு, அறிவு ஆகிய மூன்றையும் வளர்த்திட வேண்டும். அ.சஜித் போன்ற சிறந்த மாணவர்கள் அறநெறிப் பாடசாலைகளில் இருந்து உருவாகி, எதிர்காலத்தில் சமூகத்திற்கும் நாட்டிற்கும் சிறந்த சேவைகளை ஆற்றுவார்கள் என்பதில் எந்தத் தயக்கமும் இல்லை. எங்கள் தாயகத்தின் எதிர்காலம் இவர்கள் கரங்களினால் என்றும் ஒளி ஏற்றப்பட வேண்டுகிறோம்!

# தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் மகா கும்பாபிஷேக தின மணவாளக் கோல உற்சவம்

அன்னை பராசக்தியின் அருளைப் பெருக்கி பக்தர்களுக்கு பேரின்பம் வழங்கும் மணவாளக் கோல உற்சவம், எதிர்வரும் 11ம் திகதி தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் வெகுவிமர்சையாக நடைபெறவுள்ளது.

இந்த நாளில், மஹா கும்பாபிஷேக தின கிரியைகள் அதிகாலை 4.00 மணிக்கு துவங்கி சிறப்பாக நடைபெற உள்ளது. இந்த புனித நாளில், தெல்லி நகர் எம்பெருமாட்டி மணவாளக் கோலத்தில் அலங்கரிக்கப்பட்டு, அழகிய பூந்தண்டிகையுடன் பக்தர்களுக்கு அருள்பாலிக்க உள்ளார்.

இதுவே பக்தர்களுக்கு தரிசனம் செய்யும் அற்புத தருணமாகும். அன்றைய நாளில், அம்பாளின் திருவருளைப் பெற, பக்தர்கள் தங்கள் குடும்பத்துடன், உறவினர்களுடன் கலந்து கொண்டு வழிபாடுகளில் ஈடுபடுங்கள். இந்த நிகழ்வில் பங்கேற்பதன் மூலம் தெய்வத்தின் அருளோடு, செழுமை, நல்லொழுக்கம், திருப்தி என வாழ்க்கையில் எல்லா வளங்களையும் பெறலாம்.



# அர்ச்சுனன் கர்வமும் கண்ணனின் பாடமும்

அந்தக் கால வழக்கப்படி, போரில் வென்ற மஹாரதர்களுக்கும், மன்னர்களுக்கும் மாலை- மரியாதை செய்யும் விழா ஒன்று நடக்கும்.

போரில் பங்கேற்ற தேர்கள் வரிசையாக நிறுத்தப்படும். தேரோட்டிகள் கீழே இறங்கி, மண்டியிட்டு நிற்பார்கள். மன்னன் அல்லது மஹாரதர்கள் கீழே இறங்கியதும், தேர்ப்பாகன் மன்னனை வணங்கி, மாலையிட்டு, வெற்றி கோஷம் முழங்குவான். அதன்பிறகு, போரில் வெற்றி தேடித்தந்த தேர்ப்பாகனுக்கு மன்னன் அல்லது மஹாரதர்கள் பொன்னும் பொருளும் சன்மானமும் தந்து கௌரவிப்பார்கள். குருக்ஷேத்திரப் போர் வெற்றிகரமாக முடிந்தபின், வெற்றி கண்ட பாண்டவ சகோதரர்களுக்காக இந்த விழா ஏற்பாடாகி இருந்தது. தர்மன், பீமன், அர்ஜுனன், நகுலன், சகாதேவன் ஆகிய ஐவரது ரதங்களும் வரிசையாக நின்றன. மரியாதை விழாச் சடங்குகள் ஆரம்பமாயின. தர்மனுடைய தேரின் முறை முடிந்தபின், பீமனது சாரதி அவனை வணங்கி வாழ்த்தினான். பரிசாக விலை உயர்ந்த ரத்தினமாலையை பாகனுக்கு அணிவித்து கௌரவித்தான் பீமன். மேலும், பூமியும் பொன்னும் பொருளும் வழங்கினான். வெற்றி கோஷங்கள் வானைப் பிளந்தன.அடுத்தது, அர்ஜுனன் ரதம்... சாரதியோ பகவான் ஸ்ரீ கிருஷ்ணன்.

“யாருக்கும் கிட்டாத மாபெரும் பேறு தனக்குக் கிடைக்கப்போகிறது. பகவான் கிருஷ்ணனே தன்னை வணங்கிப் பாராட்டப் போகிறான் என்று எண்ணி, ஒரு கணம் தன்னை மறந்த நிலையில் இறுமாப்போடு, அந்த அற்புத தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தான் அர்ஜுனன். ஆனால், கண்ணன் தேரைவிட்டு இறங்கவில்லை.

அர்ஜுனன் திகைத்தான்.



“பெருமையோ சிறுமையோ பாராது, கடமையை நிறைவேற்ற வேண்டும் என்று கீதையில் தனக்கு உபதேசித்த கண்ணன், தேர்ப் பாகனுக்குரிய கடமையைச் செய்ய ஏன் தயங்க வேண்டும் என்று நினைத்தான் அர்ஜுனன். அப்போது பகவான்

கிருஷ்ணன், அர்ஜுனனின் அறியாமையை எண்ணி நகைத்தார். “அர்ஜுனா.. இந்தத் தேர் மட்டும் ,ந்தச் சடங்குக்கு விதிவிலக்கு. முதலில் நீ இறங்கு.“. என்று கட்டளையிட்டார். ஸ்ரீ கண்ணனின் வார்த்தையை மீறி அறியாத அர்ஜுனன், அக்கணமே தேரில் இருந்து கீழே இறங்கினான். அதேநேரம், “தன் சகோதரர்களுக்குக் கிடைத்த கௌரவம் தனக்குக் கிடைக்கவில்லையே என ஒரு கணம் ஏங்கினான். “கர்மயோகம் என்ற பகுதியாகக் கடமையைப் பற்றி அத்தனை தத்துவங்களைச் சொன்ன கண்ணன், ஒரு தேர்ப்பாகனாக பணியாற்றுவதற்குரிய கடமையைச் செய்ய ஏன் தயங்குகிறான்? இதனால் மஹாரதனான எனக்கு ஏற்படும் அவமானத்தை ஏன் அவன் எண்ணிப் பார்க்கவில்லை? நான் கண்ணனை என்னுடைய தேர்ப்பாகனாக ஏற்றுக்கொண்டதால்தானே, எல்லோர் முன்னிலையிலும் எனக்கு இந்தச் சிறுமை ஏற்பட்டுள்ளது?“ என்று எண்ணி, மனம் குமுறினான் அர்ஜுனன்.

அர்ஜுனனின் மனோநிலையைத் தன் ஞானத்தால் அறிந்தார் கண்ணன். அடுத்த விநாடியே தேரிலிருந்து கீழே இறங்கினார். அதே விநாடியில், தேர்க் கொடியில் இருந்த ஆஞ்சநேயரும் விலகி மறைந்தார். கண்ணன் தேரைவிட்டு இறங்கிய மறுவிநாடியே அர்ஜுனனின் தேர் குபீரென்று தீப்பிடித்து, அக்னி ஜுவாலையுடன் எரிய ஆரம்பித்தது. எல்லோரும் திகிலோடும் ஆச்சரியத்தோடும் பார்த்தனர். யாருக்கும் எதுவும் புரியவில்லை.

“அர்ஜுனா.. இந்த பாரத யுத்தத்தில் உன் எதிரிகள் அனைவரின் தாக்குதல்களும் உன் ரதத்தின் மீதுதான் குறிவைத்து நிகழ்த்தப்பட்டன. அவர்கள் போரில் எய்த அஸ்திரங்கள், ஏவிவிட்ட தீய மந்திரங்கள், அனுப்பிய தீய சக்திகள் அத்தனையையும் தடுத்து நிறுத்தி, யுத்தம் முடியும்வரை இந்தத் தேருக்கு உயிர் கொடுத்துக் காப்பாற்றிக் கொண்டிருந்தேன். நான் சாரதியாக அமர்ந்துகொண்டிருந்ததால்தான், இந்தத் தீய சக்திகள் ,துவரை செயலற்றிருந்தன. படைக்கப்பட்ட பொருள்கள் அனைத்துக்கும் ஆரம்பமும் முடிவும் உண்டு. ,ந்தத் தேரின்



முடிவு ஏற்படும் தருணம் வந்ததை உணர்ந்தேன். நான் முதலில் இறங்கினால் இந்தத் தீய சக்திகள் செயல்படத் தொடங்கிவிடும். அந்த விநாடியே தேர் தீப்பிடித்து எரிந்து சாம்பலாகும் என்பதையும் அறிந்தேன். இப்போது புரிகிறதா, நான் முதலில் இறங்கியிருந்தால், நீ இந்தத் தீயில் சிக்கியிருப்பாய். இப்போதும் உன்னைக் காப்பாற்றவே இந்தத் தேரை விதிவிலக்காக்கி, உன்னை முதலில் இறங்கச் சொன்னேன்.

தேர்ப் பாகனாகப் பணிபுரிந்த நான் உன்னை வணங்கி, வாழ்த்தி, நீ தரும் சன்மானத்தைப் பெறத் தயங்குவதாக நீ நினைத்தாய். என் எல்லாச் செயல்களுக்கும் ஒரு காரணம்- காரியம் உண்டு என்பதைப் பல சந்தர்ப்பங்களில் நீ அறிய வாய்ப்பளித்து இருக்கிறேன். இருந்தாலும், உன்னுடைய சுயகௌரவத்தால் உன் சிந்தனை சற்று நேரம் கலங்கி இருந்தது. அது தவறு. ,தோ... உன்னை வணங்க நான் சித்தமாயிருக்கிறேன். என்று, நீண்ட விளக்கம் தந்தார் ஸ்ரீ கண்ணன். அவர் கூறிய கடைசி வார்த்தைகள் அர்ஜுனன் காதில் விழவில்லை. காரணம் அவர் கால்களில் அர்ஜுனன் வேரற்ற மரம் போல விழுந்துகிடந்தான்.

வாழ்க்கை எனும் ரதத்தினில், கடவுளை சரணடைந்தால், இறுதி வரை துன்பத்தையும் தடைகளையும் களைந்து, பிறவிப்பிணியினை கடந்தேற, சாரதி போல் நம்மை நடத்தி செல்வார்.




# பக்தி பூர்வமாக நிகழ்ந்து வரும் மருதடியான் மகோற்சவம்



மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் வரலாற்றுச் சிறப்பும் ஆன்மீக மகத்துவமும் அடியவர்களுக்கு மகத்தான பக்தி உணர்வினை ஏற்படுத்துகின்றது. ஈழத்துத் திருநாட்டில் விநாயகர் திருக்கோவில்களில் முதன்மைத் தலமாக விளங்கும் இவ்வாலயம், தமிழ் வேந்தர் காலத்துத் திருத்தலங்களில் ஒன்றாக போற்றப்படுகின்றது. பல்வேறு ஐதீக வரலாறுகளும், அற்புத சம்பவங்களும் இந்தத் தலத்தைச் சுற்றி புனித கதையாக பவனி வருகின்றன. மருதடி விநாயகர் ஆலயம் ஆரம்பத்தில் தனியாரின் பராமரிப்பில் இருந்து கடந்த நூற்றாண்டில் பொதுக்கோவிலாக பிரகடனமடைந்து, தற்போது பொதுமக்கள் நிர்வகிக்கும் ஆலயமாக உள்ளதோடு, சமய பணிகள் சிறப்பாக முன்னேற்றப்படுகின்றன. பூசை வழிபாட்டு ஒழுங்குகள், திருப்பணிகள், அறநெறிப் பாடசாலை மற்றும் ஆலய நிர்வாகம் ஆகியவை வழக்கமாக முறையாக நடைபெற்று வருகின்றன.

வரலாற்றுச் சிறப்பு மிக்க மருதடி விநாயகர் ஆலயத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்த மகோற்சவம் 22.03.2025 சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து 25 நாட்கள் நடைபெறுகிறது.



திருவிழாவின் முக்கிய நிகழ்வுகளில் ஒன்றாக எதிர்வரும் 14.04.2025 திங்கட்கிழமை, தமிழ் புத்தாண்டு தினத்தில் இரதோற்சவம் மிகச்சிறப்பாக நடைபெறவுள்ளது. மறுநாள் தீர்த்தோற்சவம் சிறப்பாக நடைபெறுவதாக ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. இவ்விழா காலத்தில் அடியார்கள் பெருமளவில் திரண்டு வருவார்கள். மருதடியான் விநாயகர் மீது கொண்டுள்ள பக்திப் பரவசத்தில் பலரும் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவார்கள். ஆண்டு தோறும் சித்திரை மாதம் புதுவருடப் பிறப்பன்று, பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ விநாயகப் பெருமானின் இரதோற்சவத் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெறும். பெருமானின் திருவருளைப் பெறுவதற்காக பல ஊர்களில் இருந்து பக்தர்கள் நேர்த்திகளை நிறைவேற்ற இத்தலத்திற்குத் தினமும் வருவார்கள். இவ்வாலயத்தில் மூன்றுகாலப் பூசைகள் காலந்தவறாது நடைபெறுகின்றன. ஒவ்வொரு மாதத்திலும் அமாவாசையை அடுத்துவரும் சதுர்த்தி திதியில்



விநாயகப்பெருமானுக்கு விசேட பூசைகள் நடைபெறுகின்றன. ஆவணி சதுர்த்தி திருநாளில் பக்தர்கள் பெருமளவில் திரண்டு வருவதும் இவ்வாலயத்தின் சிறப்புகளில் ஒன்றாகும். மருதடி விநாயகரின் மகிமையைக் கூறும் பல புராணக் கதைகள்

உள்ளன. இக்கோயிலில் கார்த்திகை மாதத்தில் விநாயக விரதம் ஆரம்பமாகி, 21 நாட்கள் பிள்ளையார் கதைகள் வாசிக்கப்பட்டு, கடைசி நாளில் கஜமுகாசுர சங்காரம் நடைபெறுவது மிகப்பெரிய ஆன்மீக நிகழ்வாகும். பங்குனி மாதத்தில் உற்சவம் தொடங்கி, தமிழ்புத்தாண்டு தினத்தில் இரதோற்சவமாக நடைபெறுவது மரபாக இருந்து வருகிறது. 2004 ஆம் ஆண்டு வரை பதினெட்டு நாட்கள் உற்சவம் நடந்த நிலையில், 2014 ஆம் ஆண்டு கருங்கற் கோவிலாக புனரமைக்கப்பட்டதன் பின்னர், 48 நாட்கள் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதன் பிறகு, உற்சவ நாட்கள் மாற்றப்பட்டு, தற்போது 25 நாட்கள் மகோற்சவம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

மகோற்சவ காலங்களில் பக்தர்கள் காவடி எடுப்பது, தீச்சட்டி எடுத்தல், அங்கப்பிரதட்சணம் செய்தல், அடியழித்தல், அள்ளுகாசும் தென்னம்பிள்ளையும் வழங்கல், பிள்ளை விற்று வாங்கல், மடிப்பிச்சை எடுத்தல், பட்டுச் சார்த்தல், தேவாரம் ஓதுதல், வடம் பிடித்தல் போன்ற நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவர். மேலும், புராணம் படித்தல், சமயப் பிரசங்கம் செய்தல், திருமுறைகள் ஓதுதல், ஓதுவார்களை அழைத்து பக்தர்களுக்காக ,றைச்செய்திகளை வழங்குதல் போன்ற ஆன்மீக நிகழ்வுகள் மக்களின் சமய அறிவைப் பெருக்கும் வகையில் நடத்தப்படுகின்றன. மருதமரத்தடியில் வீற்றிருந்து அருளும் விநாயகப்பெருமான் பக்தர்களின் வேண்டுதல்களுக்கு அருள் பாலிக்கின்றார். இம்முறை மகோற்சவக் காலத்தில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தர உள்ளதாக எதிர்பார்க்கப்படுகின்றது. இந்நிகழ்வுகளை சிறப்பாக



மேற்கொள்வதற்காக ஆலய நிர்வாகம் பல்வேறு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. விழா நாட்களில் பக்தர்களுக்காக விசேட அன்னதானம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பாதுகாப்பு மற்றும் மருத்துவ உதவிகளும் ஆலய வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

மருதடி விநாயகர் ஆலய மகோற்சவம் சிவபக்தர்களின் ஆன்மீக எழுச்சிக்கான ஒரு முக்கிய நிகழ்வாகவே திகழ்கின்றது. பக்தர்கள் அனைவரும் இவ்விழாவில் பங்கேற்று, பெருமானின் அருளைப் பெற்றெடுத்து வாழ்வில் நற்கருமங்களை மேற்கொள்ள வேண்டும். ”மாவாழும் பிள்ளையார் திடரில் வாழும் மருதடியிற் கணபதிதாள் வாழி வாழி” என அனைவரும் பக்தி பரவசத்துடன் பெருமானை போற்றித் தொழுது அவரின் திருவருளைப் பெற வேண்டும்.

## திருமுருகண்டி பிள்ளையார் ஆலயத்தின் நிர்வாகத்திற்கு புதிய தலைவராக செஞ்சொற் செல்வர் தெரிவு செய்யப்பட்டார்



புகழ்பெற்ற திருமுருகண்டி பிள்ளையார் ஆலயத்தின் முகாமைத்துவ குழுவின் தலைவராக, தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் தலைவர் செஞ்சொற்செல்வர் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 19.12.2024ம் திகதி புத்தசாசனம், மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சில் நடைபெற்ற இந்துப் பண்பாட்டு நிதியத்தின் ஆளுனர் சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக, மேற்படி ஆலயமானது இந்துப் பண்பாட்டின் மேற்பார்வையிலும் கட்டுப்பாட்டிலும் இயங்க வேண்டும் என எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக, ஆலய நிர்வாக குழு ஒன்றினை தாபிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டு இருந்தது. அதன் பிரகாரம் செஞ்செற்செல்வர் அவர்களை தலைவராக நியமிக்கப்பட்டுள்ளதாக இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# சிவாகம கலாநிதி. சிவஸ்ரீ தானு மகாதேவக்குருக்கள் இறைபதம் அடைந்தார்



ஈழத்தின் சிவாச்சாரிய பரம்பரையின் முதுசம் என்று போற்றப்படும் இணுவில் தர்ம சாஸ்தா குருகுல அதிபர், சிவாகம கலாநிதி. சிவஸ்ரீ தானு மகாதேவக்குருக்கள் 25.03.2025 சிவபதமடைந்தார். குருக்கள் ஐயா அவர்கள் கற்பதிலும் கற்பிப்பதிலும் தேடுவதிலும் பிறரை தட்டிக் கொடுத்து ஊக்குவிப்பதிலும் உயர் பண்பாளனாக விளங்கியவர். தனக்கென்று ஒரு குரு பரம்பரையை உருவாக்கியுள்ளார். எப்போதும் தம் மாணவனின் உயர்வில் அக்கறை உள்ள ஒரு ஆச்சார்யராக விளங்கியவர்.

சிவபூமியாகிய சைவத்தமிழ் மண்ணில் அறுபது ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக வேத சிவாகம குருகுலத்தை அவர் நடாத்தியிருக்கிறார். சைவ உலகம் போற்றிய ஐயாவின் பணியின் பயன் அனைவரும் அறிவர். ஐயாவின் புலமைக்கு சான்றாக உயர் கௌரவமாக இந்தியாவின் தமிழகத்து தருமை ஆதீனம், சிவபுரம் பாடசாலை போன்ற ஆன்மீகம் சார் நிறுவனங்களின் கௌரவிப்பு கிடைத்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. காஞ்சி காமகோடி பீடாதிபதி சங்கராச்சார்யார் அவருக்கான கௌரவிப்பில் இணைய வழியில் நேரே இணைந்து ஆசி வழங்கி வழங்கிகௌரவித்தமை உயர் சிறப்பிற்குரியது.

குருகுல மரபில் ஒரு பெரும் மாணவ பரம்பரையை உருவாக்கி சைவப்பணியாற்றி மறைந்திருக்கிறார். வேத ஆகம சாஸ்திர சம்ஸ்கிருத புலமையாளாக விளங்கியவர். அத்துடன் கலைகளில் ஆர்வமும் இரசனையும் கலைஞர்களை ஊக்குவித்து ஆசீர்வதிப்பதிலும் உயர் பெருமகனாக விளங்கினார்.

ஐயாவின் மறைவு பேரிழப்பாகும். ஐயாவின் ஆத்மா எப்போதும் எம்மை ஆசீர்வதிக்கட்டும். ஐயா அவர்களின் ஆத்மா இறைவன் திருவடிகளில் இளைப்பாற பிரார்த்திப்பக்கிறோம்.

# சிவப்பிரம்மஸ்ரீ தானு.மஹா தேவ சிவாச்சார்யார் உடல் நலம் பெற வேண்டி விசேட வழிபாடுகள்






தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் 23.03.2025 மிகுந்த ஆன்மிக உணர்வுடன் 11,000 அன்னையின் நாமங்கள் உச்சரிக்கப்பட்டு, அதனால் ஆனந்த ஒளி பரவியது. அந்தணப் பெருமக்கள் அனைவருக்கும் ராஜ குருவாக அவதரித்த சிவப்பிரம்மஸ்ரீ தானு.மஹா தேவ சிவாச்சார்யார் அவர்களின் உடல் ஆரோக்கியம் வேண்டி லலிதா சகஸ்ர நாம அகண்ட பாராயணம் சிறப்பாக நடைபெற்றது.

காலை 7.00 மணிக்கு தேவஸ்தானத்தின் தலைவர் செஞ்சொற்செல்வர் அவர்கள் சிவப்பிரம்மஸ்ரீ தானு. மஹாதேவ சிவாச்சார்யார் அவர்களின் பணிகளை பாராட்டி, லலிதா சகஸ்ரநாம அகண்ட பாராயணத்தை தொடங்கி வைத்தார். அதன் பின்னர் தேவஸ்தானம் வருகைதந்த சிவாச்சாரியார்கள் தொடர்ந்து 11 தடவைகள் லலிதா சகஸ்ரநாமத்தை நண்பகல் 12.00 மணி வரை இடைவிடாது உச்சரித்தனர்.

இதன் விளைவாக தேவஸ்தானம் முழுவதும் அன்னையின்





திருவிளைவை உணர்த்தும் சக்தி பரவியது. அம்பாளின் பெருமைகளை இடைவிடாது போற்றும் இந்தப் பாராயண ஒலிகளை கேட்பது, பல பிறப்புகளில் செய்த புண்ணிய விளைவாகவே அமைகிறது.

இன்றைய காலக்கட்டத்தில் மனிதர்கள் ஒரு நொடிக்கூட பிற உயிர்களுக்கு செலவிட வேண்டாம் என எண்ணி வாழும் போது, சிவப்பிரம்மஸ்ரீ தானு. மஹா தேவ சிவாச்சார்யார் அவர்களின் உடல் நலத்திற்காக தங்கள் நேரத்தை அர்ப்பணித்து, அன்னையின் அருளை வேண்டி பாராயணம் செய்த சிவாச்சாரியார்களின் அர்ப்பணிப்பு வரவேற்கத்தக்கது. இதனை நினைவில் கொண்டு தேவஸ்தானத்தின் தலைவர் செஞ்சொற்செல்வர் அவர்கள் தனது ஆழ்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டார். லலிதா சகஸ்ரநாமத்தின் இடைவிடாத ஒலியால் தேவஸ்தானம் சக்தி பெற்றதோடு, பக்தர்களுக்கும் ஆன்மிக திருப்தி கிடைத்தது.






# யோகர் சுவாமிகள் பற்றிய ஒரு பார்வை!



எமது காலத்திலே வாழ்ந்து மறைந்த சித்த புருஷர்களில் யோகர் சுவாமிகள் மிக மிக முக்கியமானவர், கடையிற் சுவாமிகளின் சீடர்களில் ஒருவர் செல்லப்பா சுவாமிகள். செல்லப்பா சுவாமிகளின் ஒரே ஒரு சீடர் யோகர் சுவாமிகளாகும். செல்லப்பா சுவாமிகள் உலகத்திற்கு தன்னைக் காட்டிகொள்ளாது வாழ்ந்து மறைந்து போன மகான். உலகத்தோர் கண்ணுக்குப் பைத்தியக்காரன் போன்றே காட்சியளித்தார். அதனால் உலகம் அவரை விசர்ச் செல்லப்பா என்றே பெயர்சூட்டி அழைத்தது செல்லப்பா சுவாமிகள் யோகர் சுவாமிகளுக்கு நான்கு மகா வாக்கியங்கள் உபதேசித்தார். இந்த நான்கு மகா வாக்கியங்களும் சகல சாஸ்திரங்களினதும் சாரம் கொண்டவை. ஆதலினால் இவை மகா வாக்கியங்கள் என்று அழைக்கப்பட்டன.

யோகர் சுவாமிகள்சரித்திரப் பிரசித்தி பெற்ற மாவிட்டபுரத்திலே சைவ வேளாண் குலத்தில் அம்பலவாணர் என்னும் சைவப் பெரியார் ஒருவர் வாழ்ந்தார். இவரது தர்மபத்தினி சின்னாச்சி அம்மையார் இவர்களது பூர்வ புண்ணிய விசேடத்தினாலே 29-05-1872 இல் அவிட்ட நட்சத்திரத்தில் ஓர் ஆண்மகவு பிறந்தது. பெற்றோர் இக்குழந்தைக்கு யோகநாதன் என்று நாமகரணம் சூட்டினர். அம்பலவாணரின் சகோதரர் சின்னையா என்பவர் கொழும்புத்துறையைச் சேர்ந்த கத்தோலிக்கப் பெண் ஒருவரை திருமணம் செய்து தமது பெயரை யோசேப்பு என்றும் மாற்றிக்கொண்டார்.அம்பலவாணர் மஸ்கெலியா என்ற மலைப் பிரதேசத்தில் கடை ஒன்று நடத்தி வந்தார். யோகநாதனுடைய கல்வி விடயத்தை யோசேப்பு கவனித்து வந்தார். அதனால் யோகநாதன் மாவிட்டபுரத்தைவிட்டு கொழும்புத்துறையில் வாழ வேண்டிய சூழ்நிலை உருவானது.

அக்காலத்தில் சைவப் பாடசாலைகள் மிக மிகக் குறைவு. அதனால் யோகநாதனின் கல்வி கத்தோலிக்கப் பாடசாலையிலேயே ஆரம்பமானது. இளமையில் துடுக்குடையவராயும், புத்தி யுக்தி உள்ளவராயும் வாழ்ந்து வந்தார். யோகநாதனுக்கு வயது



எட்டாயிருக்கும் போது தாயார் இறந்துவிட்டார். சிறிய தந்தையார் யோகநாதனுடைய கல்வியில் மிகுந்த ஊக்கம் காட்டினார். ஆங்கிலக் கல்வி கற்கும் பொருட்டு சம்பத்திரிசியார் கல்லூரியில் இணைக்கப்பட்டார். பகலில் சிறிய தகப்பனார் வீட்டிலும், மாலையில் யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகாமையிலுள்ள தந்தை வழி மாமியாராகிய முத்துப்பிள்ளை அவர்களுடைய இல்லத்துக்கும் போய்விடுவார்கள்.

எட்டாம் வகுப்பு வரை ஆங்கிலம் கற்றார். அம்பலவாணர் யோகனை அழைப்பித்து தேயிலைத் தோட்டம் ஒன்றிலே வேலைக்கு அமர்த்தினார். மலையகத்தின் இயற்கைச் சூழ்நிலை யோகனின் மனதைக் கவர்ந்தது. ஒருநாள் யோகநாதன் சிவனொளிபாதம் சென்று சூரியன் உதிக்கும் காட்சியினைக் கண்டு மகிழ்ந்து வந்தார். சிவனொளி பாதம் சென்று வந்த யோகநாதன் இயற்கையின் சூழலிலே தமது மனதைப் பறிகொடுத்து விட்டார். அதனால் தன்பாட்டிலேயே பேசத் தொடங்கினார். இது எல்லாம் உண்மை. எனது உடம்பு சிவன் சொத்து. சிவனுக்கே அது சொந்தம். அவனையே தேடிப் போனேன். இந்த விபரீத எண்ணங்களைக் கண்ட தந்தையார் இவரை யாழ்ப்பாணத்திற்கே அனுப்பிவைத்தார்.

யோகர் சும்மா இருக்கமாட்டார். உத்தியோகம் தேடித்திரிவார். இரணைமடுக்குளம் கட்டுமான வேலை நடைபெற்ற காலம் அங்கு சென்ற போது பிறவுண் என்ற பொறியியலாளர் பண்டகசாலை பாதுகாவலர் என்ற உத்தியோகத்தை இவருக்கு அளித்தார். உங்கள் கடமையை மறவாதீர்கள் என்று எல்லோருக்கும் உபதேசித்த சுவாமிகள் நேர்மையாகவும் உண்மையாகவும் வேலை பார்த்தார். பொறியியலாளரிடம் ஒரு நன்மதிப்பை பெற்றுக்கொண்டார். யோகநாதன் கிளிநொச்சியை விட்டு மாவிட்டபுரம் திரும்பினார். அவருக்கு அப்போது வயது 32. தந்தையும் இறந்துவிட்டார். தாயை எட்டு வயதில் இழந்தார். தந்தையை வாலிப வயதில் இழந்தார். ஆனால் மாவிட்ட கந்தன் கருணையை இழக்கவில்லை. கீரிமலையிலும் மாவிட்டபுரத்திலும் மாறி மாறி வசித்தார். கீரிமலையிலிருந்து நடையிலேயே நல்லூருக்கு வருவார். ஆத்மீகத் தாகம் மேலிட்ட காலம். குரு ஒருவரை தேடி அலைந்த காலம். பற்றுக்கோடாக இருந்த இரு முதுகுரவரையும் இழந்த போது பற்றுக்கோடு ஒன்றை நாடினார். நல்லூர்த் தேரடியில் செல்லப்பா சுவாமிகளை சந்தித்தார்.



செல்லப்பா சுவாமிகளின் பார்வை இவரை காந்தமெனக் கவர்ந்தது. குருநாதனை சந்தித்த அனுபவத்தை அவரே கூறுகின்றார்.கருத்தில் நினைந்துருகி கைகூப்புந் தொண்டர் வருத்தமெலாந் தீர்க்கும் வடிவேல் திருத்தலத்தில் தேரடியில் தேசிகனைக் கண்டு தரிசித்தேன் ஆரடா நீ என்றான் அவன் விசர்ச் செல்லப்பா என்று மக்களால் ஏசப்பட்ட செல்லப்பா சுவாமிகளைச் சூழ ஒரு கூட்டம் கூடத் தொடங்கியிருந்த காலம் செல்லப்பா சுவாமிகளின் அரிய சீடர்கள் கதிரவேலுச்சாமியும், யோகநாதனும் ஆவர். பெரும்பாலும் மூவரும் ஒன்று கூடித்திரிவர். சண்டை போடுவர். சமையல் செய்வர். சமையல் முடியும் தருணத்தில் சட்டி பானையை உடைப்பர். இச்செயலைக் கண்டால் யார்தான் இவர்களைப் பைத்தியம் என்று கூறமாட்டார்கள்.

யோகர் சுவாமிகள்கொழும்புத்துறையில் சிற்றம்பலம் சம்பந்தர் என்னும் ஒரு சைவப் பெரியார் வளவில் றோட்டுப் பக்கமாக ஒரு இலுப்பை மரம். இந்த இலுப்பை மரத்தின் கீழேதான் யோகர் சுவாமிகளுடைய அருந்தவம் நடைபெற்றது. கொழும்புத்துறை வளவில் இருந்த கடையொன்றைத் திருநாவுக்கரவு என்பவர் திருத்தி அமைத்துக் குடிசை ஒன்று கட்டிக்கொடுத்து சுவாமிகளை அதில் தங்குமாறு அவரும் அவரது தாயாரும் அன்புடன் வேண்டிக் கொண்டனர். அவர்களுடைய அன்புக்கு கட்டுப்பட்ட சுவாமிகள் பூத உடலைவிட்ட உயிர் பிரியும் வரை அக்குடியையிலேயே வாழ்ந்து வந்தார்கள். சுவாமிகளை நாடி நாள் தோறும் கூட்டம் கூடத் தொடங்கியது. செவ்வாய் வெள்ளிக்கிழமைகளில் பெருங்கூட்டம் திருமுறைகள் பாராயணம் இடம்பெறும். எல்லாத் தரங்களிலும் உள்ள மக்கள் ஒன்று கூடுவார்கள்.

ஆன்மீக தாகம் கொண்டவர்களும் வருவார்கள். தங்கள் இட்டல் இடைஞ்சல்களை தீர்த்துக் கொள்வதற்காகவும் வருவார்கள். சுவாமிகளை சோதித்துப் பார்க்கவும் வருவார்கள்.சுவாமிகள் தம்மை நாடி வந்தவர்களுடைய உள்ளப்பாங்கை அறிந்து அவர்களுக்கேற்ற வகையில் புத்திமதிகள் கூறுவார்கள். சிலரை ஏசியும் துரத்துவார்கள். அதைப் பொருட்படுத்தாமல் தம்மைத் மேலும் மேலும் நாடி வந்தவர்களை அன்புடன் அணைத்து அருளுரை வழங்குவார்கள். அவர்களை ஏசுவதன் மூலம் அவர்கள் வினைகளைச் சுவாமிகள்




தொலைத்து விடுவார்கள். இவ்வுண்மையை உணர்ந்த அடியார்கள் சுவாமிகளின் மறமயக் கருணையை நினைந்து நினைந்து ஆனந்த புஷ்பம் சொரிவார்கள்.

“எல்லோரும் ஒரு குலம், எல்லோரும் ஒரு இனம்” என்பது சுவாமிகள் தம்மை நாடி வருபவர் களுக்கு அடிக்கடி கூறும் உபதேச மாகும். ‘எனக்கும் உனக்கும் என்ன வித்தியாசம். எல்லோரும் சமம்’ என்றும் கூறுவார்கள். “நீயும் மனிதன் நானும் மனிதன் உங்கள் கடமையைப் போய்ச் செய்யுங்கள். இங்கே ஏன் வருகின்றீர்கள்? நாங்கள் பிச்சைக்காரர்கள், நாங்கள் சும்மா இருக்கின்றோம். எங்களைத் தொந்தரவு செய்யாதீர்கள்” என்று ஏசிக்கலைப்பதும் உண்டு.


“கர்மவினையால் எமக்கு இப்பிறவி வந்தது. நாம் ஒன்றும் அறியோம். நாம் ஏன் இங்கு பிறந்தோம்? இப்பிறவியால் ஒரு பொல்லாப்பும் இல்லை. அதனால் பாதகமும் இல்லை. பிறப்பு வர இருந்தது. வந்துவிட்டது. நாங்கள் ஆத்மலாபத்தை நல்லாய்த் தேடிக் கொள்ளலாம்.” என்று உபதேசம் செய்தார்கள். சுவாமிகளுடைய உபதேசங்களை எலலோருக்கும் பரப்ப வேண்டும் என்று அடியார் கூட்டம் விரும்பியது. சுவாமிகளிடம் மாத வெளியீடு ஒன்று வெளியிடுவது பற்றி அடியார்கள் விண்ணப்பித்தார்கள். சுவாமிகளும் அதற்கிசைந்து நாம் எல்லோரும் சிவத் தொண்டர்கள். நாம் செய்வது சிவத்தொண்டு ஆகவே எமது வெளியீடும் ‘சிவத் தொண்டன்’ ஆக இருக்கட்டும் என்றார்கள். 1935ம் ஆண்டு மார்கழி மாதம் முதலாவது இதழாகிய சிவத்தொண்டன் திரு. க. கி. நடராசன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்தது. சிவத்தொண்டனுக்கு நிலையம் ஒன்று காங்கேசன்துறை வீதியில் 4-11-1953 இல் உருவானது. அந்த நிலைய மேல் மாடியில் இன்னும் தியான மண்டபத்தில் சுவாமிகளுடைய ஆன்மிக அலையை இன்னும் அனுபவிக்கலாம்.

சுவாமிகள் தமது அடியார்கள் எங்கெங்கு இருந்தார்களோ அங்கங்கெல்லாம் செல்வார். யாருக்கும் அறிவித்தல் கொடுக்க மாட்டார். இருந்தாற் போல் ஒரு அடியவருடைய வீட்டில் தோன்றுவார். கேள்வியுற்ற அடியவர்கள் எல்லோரும் அங்குவந்து கூடுவர்.

அவர்களுக்கெல்லாம் நல்லுபதேசம் கிடைக்கும். சிலசமயம் கண்மூடி சிவயோகத்திலே ஆழ்ந்து விடுவார். அன்பர்களும் தியானத்தில் மூழ்கி ஆனந்தம் பெறுவர். இரண்டு வருடகாலம் சுவாமிகள் கொழும்புத்துறை ஆச்சிரமத்தை விட்டு எங்கும் செல்லவில்லை. 24-03-1964 செவ்வாய்க்கிழமை அதிகாலை ஆயிலிய நட்சத்திரத்தில் சுவாமிகள் மகாசமாதி அடைந்தார்கள். சுவாமிகளுடைய குருபூசை ஆயிலிய நட்சத்திரத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

எவ்வுயிரும் பெருமான் முன்னிலையென்று கருணை செய் கடவுள் உள்ளும் புறமும் உள்ளார். சுவாமிகளின் மறைவுக்குப் பின்னர் அவரது சீடர்களான மார்க்கண்டு சுவாமிகள், சந்த சுவாமிகள், செல்லத்துரை சுவாமிகள் போன்றோர் அவரது பணியை முன்னெடுத்துச் சென்றார்கள்.

## தவத்திரு யோகர் சுவாமிகளின் குருபூசை நல்லூரில் நடைபெறுகிறது



தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தால் ஆண்டுதோறும் சிறப்பாக அனுஷ்டிக்கப்படும் யோகர் சுவாமிகளின் குருபூசை வருகின்ற 07.04.2025 (ஞாயிற்றுக்கிழமை) அன்று, நல்லூர் கோவில் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீதுர்க்கா மணிமண்டபத்தில் சிறப்பாக நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் (தலைமை, ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்) தலைமை வகிக்கவுள்ளார்.

யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை பாடல்களை துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகள் பாடவுள்ளார்கள். சிறப்புரையினை கலாநிதி. ஜெயந்திரன் அவர்கள் (சிரேஷ்ட விரிவுரையாளர், இந்து கற்கைகள் பீடம், யாழ் பல்கலைக்கழகம்) நிகழ்த்தவுளார்கள். ஈழத்து சித்தர்களில் முக்கியமான யோகர் சுவாமிகளின் நினைவுகளை மீட்டிப் பார்க்கும் இந்நிகழ்வில் உங்கள் பிள்ளைகளோடு கலந்து கொள்வது சாலப் பொருத்தமாக இருக்கும்.

# நல்லூரரான் திருவடி

நல்லூரரான் திருவடியை
நான்நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனடி –
கிளியே!
இரவுபகல் காணேனடி.

ஆன்மா அழியாதென்று
அன்றெனக்குச் சொன்னமொழி
நான்மறந்து போவேனோடி -
கிளியே!
நல்லூரரான் தஞ்சமெடி.

தேவர் சிறைமீட்ட
செல்வன் திருவடிகள்
காவல் எமக்காமெடி -
கிளியே!
கவலையெல்லாம் போகுமெடி.

எத்தொழிலைச் செய்தாலென்
ஏதவத்தைப் பட்டாலென்
கர்த்தன் திருவடிகள் -
கிளியே!
காவல் அறிந்திடெடி.

பஞ்சம்படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி -
கிளியே!
ஆறுமுகன் தஞ்சமெடி.

பரிதிகாயில் வாடாது
பவனம் வீசில் வீழாது
பரவை சூழில் ஆழாதெடி -
கிளியே!
படைகள் மோதில் மாயாதெடி.

அந்தமாதி .இல்லாத
ஆன்மாவே நாங்களென்று
சிந்தைதந்த செல்வனெடி -
கிளியே!
சீரார் நல்லூ ராசானெடி.

வந்ததிலும் போனதிலும்
மனதைவை யாதேயென
விந்தையுடன் சொன்னானெடி-
கிளியே!
விளங்கு நல்லூர் வாசனெடி.


சாதனை செய்தபேர்கள்
சாகார் உலகிலெனக்
காதலுடன் சொன்னானெடி -
கிளியே!
கலங்காத வீரனெடி.

சுவாமி யோகநாதன்
சொன்னதிருப் பாடல்பத்தும்
பூமியிற் சொன்னாலெடி -
கிளியே!
பொல்லாங்கு தீருமெடி.

-யோகர் சுவாமிகள்-




# கொடிமரம் பிரதிஷ்டை நிகழ்வு மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் பக்தி பூர்வமாக இடம்பெற்றது




மாவிட்டபுரம் என்பது யாழ்ப்பாணத்தின் வரலாற்றுச் சுவடுகள் நிறைந்த புனிதத் தலம். இங்குள்ள கந்தசுவாமி திருக்கோயில், வட மாகாணத்தில் உள்ள பாரம்பரிய மற்றும் ஆன்மீக முக்கியத்துவம் மிக்க ஆலயங்களில் ஒன்றாகும்.

இக்கோயிலின் மகாகும்பாபிஷேகம், நீண்ட ஆண்டுகளின் பின்னர், வரும் 2025 ஏப்ரல் 11ஆம் திகதி, பங்குனி உத்திரம் நாளில், மிகுந்த பக்தி உணர்வுடன் நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.




இதற்கு முன்னோடியாக, கொடிமரம் பிரதிஷ்டை நிகழ்வு, சமீபத்தில் கோயில் வளாகத்தில் பக்தி பூர்வமாக இடம்பெற்றது. பல ஆண்டுகளாக இல்லாத கொடிமரம், இம்முறை நிமிர்ந்து நிற்பதை பார்த்த அடியவர்கள், நெஞ்சில் கமழும் ஆனந்தத்துடன் வழிபாட்டில் ஈடுபட்டனர்.




கொடிமரம் என்பது எந்தவொரு திருக்கோயிலும் ஆன்மீக சக்தியின் நிழலாகவும், திருவிழாவின் ஆரம்பத்தைக் குறிக்கும் முக்கியமான அடையாளமாகவும் கருதப்படுகிறது.



# தேடி வந்த மகாலட்சுமி

மகாருத்ரம் என்ற காட்டில் தேவகர்ப்ப மகரிஷி ஆஸ்ரமம் இருந்தது. அங்குள்ள தோட்டத்தில் துளசி, மந்தாரை, மல்லிகை செடிகள் இருந்தன. சில பசுக்களையும் பராமரித்து வந்தார். மங்களகரமான சூழல் நிலவியதால் மகாலட்சுமியின் பார்வை அங்கு விழுந்தது. போதாக்குறைக்கு விஷ்ணுவுக்கு நைவேத்யம் செய்த பாலையே, உணவாக ஏற்பார் மகரிஷி. இதனால் லட்சுமி, அவரை நேரில் காண ஆஸ்ரமத்திற்கே வந்து விட்டாள்.

“மகரிஷியே! உம் பக்தியை மெச்சுகிறேன். செல்வ வளமுடன் வாழ்வீராக!” என வாழ்த்தினாள்.

“தாயே! துறவிக்கு செல்வம் எதற்கு? பிறப்பற்ற முக்தியே என் விருப்பம்” என்றார்.

“முற்பிறவியில் செய்த புண்ணியத்தால் நீர் செல்வந்தனாக வாழ்ந்தாக வேண்டும். அதன் பின்னரே உமக்கு முக்தி உண்டாகும்” என்று சொல்லி மறைந்தாள். லட்சுமியின் எண்ணத்தை முறியடிக்க வேண்டும் என தீர்மானித்த மகரிஷி ஆஸ்ரமத்தை விட்டு கிளம்பினார்.

ஓரிடத்தில் பல்லக்கு, பரிவாரம், படை வீரர்கள் என பெருங்கூட்டம் இருந்தது. காட்டுக்கு வேட்டையாட வந்த அந்நாட்டின் மன்னர் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். அவர் அருகில் ரத்தின கிரீடம் பட்டுத்துணியில் வைக்கப்பட்டிருந்தது. மகரிஷி யின் மனதிற்குள் விபரீத எண்ணம் எழுந்தது.

"கிரீடத்தை காலால் உதைத்தால் மன்னரின் கோபத்திற்கு ஆளாகலாம். அதற்கு தண்டனையாக தன்னைக் கொல்ல மன்னர் உத்தரவிடுவார். அதன் மூலம் லட்சுமியின் ஆசை நிறைவேறாமல் போய் விடும்," என எண்ணினார். இதை அறிந்த லட்சுமி, அஷ்ட நாகத்தில் ஒன்றான அனந்தனை அங்கு அனுப்ப கிரீடத்திற்குள் ஒளிந்து கொண்டான்.

மன்னரை மகரிஷி நெருங்கினார். கிரீடத்தை காலால் உதைத்தார். வீரர்கள் மகரிஷியைப் பிடிக்க விரைந்தனர். ஆனால், கிரீடத்திற்குள் இருந்த பாம்பு வெளிப்பட்டு புதருக்குள் மறைந்தது. உயிரை காக்கவே, கிரீடத்தை மகரிஷி எட்டி உதைத்திருக்கிறார் என புரிந்து கொண்ட மன்னரும், வீரர்களும், அவர் திருவடியில் விழுந்து நன்றி கூறினர். அவரை அரண்மனைக்கு அழைத்துச் சென்ற மன்னர், மகரிஷியை ராஜ குருவாக ஏற்றார். சகல வசதியுடன் வாழச் செய்தார். கொடுக்க நினைத்து விட்டால் துறவிக்கு கூட லட்சுமி, தேடி வந்து கோடீஸ்வரனாக வாழும் பாக்கியம் தருவாள்.

## இந்திய பிரதமர் திருக்கோணேஸ்வரர் ஆலய புனரமைப்புக்கு இந்தியா உதவுவதாக உறுதி

திருகோணமலையில் உள்ள திருக்கோணேஸ்வரர் ஆலயத்தை புனரமைக்க இந்தியா உதவும் என இந்தியப் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார் .இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர் மோடி இலங்கை ஜனாதிபதியுடன் சந்திப்பு நடத்திய பின் கூட்டுச் செய்தியாளர் மாநாட்டை நடத்தினார். அதில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், திருகோணமலையிலுள்ள திருக்கோணேஸ்வரக் கோயிலின்



புனரமைப்புக்கு இந்தியா உதவும். மேலும் அநுராதபுரம் மகாபோதி கோயில் வளாகத்தில் புனித நகரத்தின் கட்டுமானத்திலும் நுவரெலியாவில் சீதா எலிய கோயிலின் கட்டுமானத்திலும் இந்தியா ஆதரவளிக்கும் என்றார்




# தேரடியில் யோகர் சுவாமியின் சற்குருதரிசனம்

நல்லூர்த் தேரடியில் யோகர்சுவாமி எவ்வாறு செல்லப்பா சுவாமிகளால் ஆட்கொள்ளப்பட்டார் என்பதை செல்லத்துரை சுவாமிகள் யோகசுவாமிகள் வாழ்க்கையும் வழிகாட்டுதலும் என்ற நூலில் பின்வருமாறு அழகாகக் குறிப்பிடுகின்றார்.

செல்லப்பருடன் பலநாட் பழக்கம் கொண்ட சிலர், அவர் ஒரு பெரிய மனிதர் என்பதை உணர்ந்து அவரைத் தரிசித்து வரும் நியமம் பூண்டிருந்தனர். அவர்கள் பெரும்பாலும் கொழும்புத்துறையைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். இதனால் செல்லப்பரைக் "கொழும்புத் துறையாரின் சுவாமி" எனவும் சிலர் கூறினர். அவ்வாறான கொழும்புத் துறை வாசிகளுள், விதானையார் திருஞானசம்பந்தர், துரையப்பா என்போர் சிலர். ஒரு நாள் செல்லப்பரைத் தரிசிக்கச் சென்ற இப்பெரியவர்களுடன் இளைஞனான யோக முனியும் சென்றனர். செல்லப்பதேசிகர் தம்மைத் தரிசித்து நின்ற யோக முனியை நோக்கி இடி போன்ற குரலில் 'யாரடா நீ" என்று அதட்டினார்.

இக் கர்ச்சனையைக் கேட்டோர் இளைஞனான அந்தப் புதிய அடியவரைப் பார்த்துச் சிரித்திருத்தல் கூடும். கொழும்புத்துறைவிதானையார் முதலியோர் தாம் அழைத்து வந்த புதியவருக்காக இரங்கியிருப்பர். ஆனால் தேகமே



மெய்யென்று பழகிப்போன ஒருவரின் தேகம் முதலிய திரைகளையெல்லாம் விலக்கி "ஆத்மாவேநாம்" என்பதை உணர்த்தும் நாதஒலியே அந்த ஞான மொழியாகும். அன்பரின் ஆத்மாவை மறைத்து மூடிக் கிடக்கும் களிம்புகளையெல்லாம் ஒழிக்கும் இரத குளிகையே அந்த வாக்கு. அன்பனைக் கண்ட மகிழ்ச்சியாலும், அவசரத்திலும் அப்பொழுதே பொழிந்த மறக்கருணை யமுதே அம்மந்திர மொழி. நாளாக நாளாக உணர்ந்த இவ்வுண்மையைப் பின்னர்

" யாரடாநீ யென்று அதட்டினான் அன்றேயான் பெற்றேன் அருள்"

எனப்பாடிவைத்தனர். இந்த நன் மருந்து அன்பரின் நெஞ்சிலூறியதும், செல்லப்பதேசிகர் தமக்கியல்பான மாறாக்கருணை பூத்த திருமுகத்தால் நோக்கி "நல்லதப்பா வா, உன்னைப் போன்ற ஆளைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என வாக்கியப் பிரசாதம் ஈந்தார். செல்லப்ப மூர்த்தியின் இந்த மங்களகரமான வரவேற்பு, புத்தடியார் ஒருவருக்குக் கிடைக்கக்கூடிய பெரும்பேறேயாம்.

அந்த நல்வாக்கு அவ்வடியவர் அடையவிருக்கும் நற்கதிக்கு ஓர் அறிகுறியாகவும் அமைந்தது. இவ்வாறு சிவபுரத்திலே தான் ஊட்ட உண்டு களித்திருந்த பசு, ஏதோவொரு மருளினால் வெருண்டு, சிவபுரத்தை விட்டு நீங்கி உலகக் கானகத்தைச் சென்று உழன்று திரிந்தபொழுது, தன் கண்மணியான அப்பசுவைத் தேடிக் கொண்டுவந்து தேர்முட்டிப்படியில் காத்திருந்த கருணைப்பித்தன் அதனைக் கண்டுகொண்டான். இனிச் சற்று பசுவின் போக்கில் செல்லவிட்டுப் பின் மருட்சி நீக்கித் தன்னுடன் அழைத்துக் கொண்டு சிவபுரம் சென்றுவிடுவான்.

தேர்முட்டிப்படியிலே "தூண்டில்" போட்டுக்கொண்டிருந்த தேசிகர் உறுமீனான சீடரைக் கண்டு விட்டார். இனி இரையைச் சிறிது கொத்தவிட்டு இழுத்தெடுத்து விடுவார். சற்குரவனின் அருட்கண்ணியிலே சீடர் அகப்பட்டுக் கொண்டார். இனி அவர் அதினின்றும் நழுவுதற்கில்லை.